# அன்பில் செழித்த உறவு!

உலகத்து மனிதர்களின் அறிவு அத்தனையும் வழித்தெடுத்து ஆர்.டி.எக்ஸ் வெடிகுண்டுகள் செய்து கொண்டிருக்கிறார்கள் சிலர். சொந்த வாழ்வின் சுகதுக்கங்களில் தொலைந்துவிடாமல் அடுத்த தலைமுறை மீது அக்கறை ஊற்றெடுத்து அன்பு செய்து கொண்டிருக்கிறார்கள் வேறு சிலர். எது பற்றிய சலனமும் இல்லாமல் கடந்து போகிறார்கள் பலர். ஓட்டலில் டேபிள் துடைத்தபடி, பீடி சுற்றியபடி, இருசக்கர வாகனங்களை பழுது பார்த்தபடி, சிக்னல்களில் சில்லறைக்கு கையேந்தியபடி, வீதியோரங்களில் குப்பை பொறுக்கியபடி... இப்படி கல்வி மறுக்கப்படும் பிஞ்சுகள் நம்மை ஒவ்வொரு கணமும், ‘நீங்கள் எந்த வகை’ என்று உலுக்கி கேள்வி கேட்கிறார்கள்.

பதில் சொல்லத் தெரியாமல், பதில் சொல்ல முடியாமல் கனத்த இதயங்களோடு அவர்களைக் கடந்து போய்விடுகிறோம். ஆனால், அக்கறை ஊற்றெடுக்கும் அன்போடு அடுத்த தலைமுறைக் குழந்தைகளை தேடிப்போய் கல்வி வெளிச்சம் தருகிறது ‘வாழை’!

‘அன்புள்ள அக்காவுக்கு, உங்கள் மணிமேகலை எழுதுறேன். நல்லா இருக்கீங்களா? நம்ம வாழை அண்ணா, அக்கா எல்லாரையும் விசாரிச்சேன்னு சொல்லுங்க. பத்தாம் வகுப்பு பரீட்சைய சூப்பரா எழுதியிருக்கேன். எனக்கு கணக்கு வராது, இங்கிலீஷ் வராதுன்னு உங்ககிட்டேயே அழுது இருக்கேன். ஆனா, இப்ப அந்த ரெண்டு பரீட்சையையும் நல்லா எழுதி இருக்கேன் அக்கா. உங்களுக்கும் எனக்குப் படிப்பு சொல்லிக்கொடுத்த வாழைக்கும் ரொம்ப நன்றி...’

வார்த்தைகளைக் கோர்த்துக் கோர்த்து கடித மாலை தொடுத்திருக்கிற மணிமேகலைக்கு வாழ்விடம் தர்மபுரி மாவட்டம், சின்ன வத்தலாபுரம் கிராமம். அந்தக் கடிதத்தில் வருகிற மணிமேகலையின் அக்கா பிரவீனாவுக்கு சென்னையில் ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் வேலை. இருவருக்கும் ரத்த சம்பந்தம் இல்லை; ஒரே ஊர் இல்லை;

த.செ.ஞானவேல்



ஒரே ஜாதியோ, மதமோகூட இல்லை. மூன்று வருடத்திற்கு முன்புவரை இருவருமே முகம் தெரியாத அந்நியர்கள். இவர்களை இணைத்தது வாழை!

"நம்ம எல்லாருக்கும் நலம் விசாரிச்சு நாலு வரி கடிதம் வந்து எவ்வளவு நாளாச்சு? நமக்கு பிடிச்சவங்களை நலம் விசாரிச்சு நாம கடிதம் எழுதி எவ்வளவு நாளாச்சு? தப்பித்தவறி வர்ற போஸ்ட் எல்லாமே கிரெடிட் கார்டு பில், வங்கி கணக்கு விவரம்னு மொத்தமா வணிகமயமான எங்க வாழ்க்கையை ஜீவனோடு உயிர்ப்பிக்க வந்தாங்க வாழை பிள்ளைகள். என் பொறுப்பில் இருக்கும் மாணவி ஒவ்வொரு வாரமும் எனக்கு கடிதம் எழுதிடுவா. நானும் பதில் எழுதுவேன். கிராமத்தில் பல கஷ்டங்களுக்கு நடுவில் படிக்கிற மாணவர்களின் படிப்புக்கு உதவணும்னு நினைச்சு நான் வாழையில் சேர்ந்தேன். அந்தப் பிள்ளைகள் எனக்குக் கத்துக்கொடுத்ததுக்கு ஈடா எதையுமே செய்ய முடியாது'' என்கிற பிரவீனாவின் வார்த்தைகளில் அன்பின் ஆழமும், மகிழ்ச்சியின் உச்சமும் ததும்பி வழிகிறது.

"வசதியும் வாய்ப்பும் இருக்கிறவங்களுக்கே வழிகாட்ட யாராவது தேவைப்படும்போது, வறட்சியான வாழ்வும், மிரட்சியான பயமும் மட்டுமே சொத்தாக உள்ள கிராமத்து மாணவர்கள் மீது அக்கறை செலுத்துவது அவசியமா? இல்லையா?'' என்று நம் பொறுப்பை வலியுறுத்தும் பாரதிராஜன் வாழை அமைப்பின் செயலாளர்.

"சென்னைக்கு ரொம்ப பக்கத்தில்



இருக்கிற திண்டிவனம் எனக்கு சொந்த ஊர். ஆனா, கல்விக்கும் வழிகாட்டுதலுக்கும் ரொம்ப தூரமாவே இருந்தேன். தட்டுத்தடுமாறி படிச்சு, ஒரு நல்ல வேலைக்கு வந்த பிறகு எல்லாரும் தானுண்டு, தன் வேலை உண்டுனு உலகத்தைச் சுருக்கிடாம இருக்கிறதுக்காக, நண்பர்கள் சிலர் சேர்ந்து நான்கு வருஷத்துக்கு முன்னால வாழை ஆரம்பிச்சோம். கணக்கில் 30 மார்க் எடுத்த என்னோட படிச்ச நண்பன் ஒருத்தன், 'எனக்கு படிப்பு வரலை'னு சொல்லி கூலி வேலைக்குப் போயிட்டான். 'அவனுடைய பாஸுக்கும் பெயிலுக்கும் நடுவில் வெறும் 5 மார்க்தான் இருந்துச்சு'னு யாராவது சொல்லியிருந்தா, அவன் வாழ்க்கை அன்னைக்கே விடிஞ்சிருக்கும். ஆதரவற்ற பிள்ளைகளின் வாழ்வில் வெளிச்சம் தொடர்ந்து இருக்க, அவ்வப்போது அரவணைக்கிற ரெண்டு கைகள் தேவை. அது உங்கள் கைகளாகவும் இருக்கலாம். அதற்குத் தயாரா இருக்கிற யாரும் வாழையில் உறுப்பினர் ஆகலாம். ஒரு குழந்தையின் வாழ்வில் திருப்புமுனையா இருக்க வருஷத்துக்கு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பத்து நாள் கொடுக்கிற மனசு இருந்தால் போதும். முகம் தெரியாத



ஒரு குழந்தைக்கு நீங்களும் அண்ணனாக, அக்காவாக மாற www.vazhai.org என்கிற இணையதள முகவரிக்கு வாங்க'' என்கிற பாரதியின் செல்பேசி (98847 07546) எப்போதும் அலறிக்கொண்டே இருக்கிறது. வாழையின் மாணவர்கள் தேர்வு எழுதிய விவரங்களைப் பகிர்ந்துகொண்டே இருக்கின்றனர். 'ஒரு குழந்தைக்கு பகிரும் சில நிமிடங்களின் அர்த்தங்களை' நேரில் பார்க்கும்போது சிலிர்க்கிறது.

அடுத்த தலைமுறையை வாரி அணைத்துக்கொள்ளும் எண்ணமுடைய வாழையின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் என்பது உலகத்தின் எட்டாவது அதிசயம். 'டேட்டுக்கும், சாட்டுக்கும் நேரம் போதாமல் தவிக்கிறார்கள் இளைஞர்கள்' எனும் குற்றச்சாட்டை இவர்கள் அழுத்தமாகத் துடைத்திருக்கிறார்கள்.

"தமிழகத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் செல்லமுடி, சின்னவத்தலாபுரம், நெருப்பூர் ஆகிய மூன்று கிராமப் பள்ளிகளிலிருந்து 15 மாணவர்களோடு தொடங்கியது வாழையின் கனவு.



இந்த நான்கு வருடத்தில் 150 மாணவர்களாக உயர்ந்திருக்கிறது எங்கள் கனவு.

மெத்தப் படித்த கல்வியாளர்களும், திறமையான ஆசிரியர்கள் இருக்கிற பள்ளிகளும் நூற்றுக்கு 90 மதிப்பெண் எடுக்கிற மாணவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, பைநிறைய காசு வாங்கிக்கொண்டு, அவர்களை 95 மதிப்பெண் எடுக்க வைக்க தங்கள் உடல், பொருள், ஆவியெல்லாம் தந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் வாழை 20 மதிப்பெண் எடுக்கிறவர்களைத் தேடிக் கண்டுபிடித்து, 70 மதிப்பெண் வாங்கும் அளவு உயர்த்தும் மகத்தான பணியில் ஈடுபடுகிறது என்பதில் பெருமிதம்தான்'' என்கிற ரமேஷ், சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். திருமணம் செய்துகொண்ட பிறகு இப்போது அவருடைய மனைவியும் இன்னொரு மாணவிக்கு அக்காவாகியிருக்கிறார்.

வாழையின் பெருமையை நிரூபிக்கிற சாட்சியாக இருக்கும் சிலம்பரசன், கிருஷ்ணகிரி பாலிடெக்னிக்கில் முதலாண்டு முடிக்கப்போகிறான். "உன்னைய படிக்க வைக்கிற சக்தி இல்லப்பானு சொல்லி மும்பைக்கு ரயிலேத்தி விட்டாங்க. படிக்கணும்னு வெறியோடு இருந்த எனக்கு மும்பையில் ஒரு சிப்ஸ் கடையில் வேலை. வாழை அண்ணாவுக்கு லெட்டர் போட்டேன். 'நாங்க படிக்க வைக்கிறோம்'னு கூப்பிட்டாங்க. பத்தாவது படிச்சா போதும்னு நினைச்ச எனக்கு, இப்ப பாலிடெக்னிக்ல அப்ளிகேஷன் வாங்கினதுல ஆரம்பிச்சு, கார்டியனா கையெழுத்து போட்டது வரைக்கும் வாழை அண்ணன்தான். படிச்சு வேலைக்குப் போனதும், என்னை மாதிரி இருக்கிற ஒருத்தரையாவது நிச்சயமா படிக்க வைப்பேன்'' என்கிற சிலம்பரசனை வாரி அணைத்துக் கொள்ளத் தோன்றுகிறது.

அன்பில் செழித்த உறவுக்கும், தலைமுறை தாண்டிய கனவுக்கும் 10 நாட்கள் தரமுடிந்தவர்கள் பாக்கியசாலிகள். அதைப் பெற முடிந்தவர்கள் அதிர்ஷ்டசாலிகள்! ●